பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 13 திங்கட்கிழமை 31.10.2022 கதிர் 247

## நீதிமன்றம் சென்ற 2 பேர் வீதியில் சுட்டுக் கொலை

### ஹிக்கடுவையில் பயங்கரம்




ஹிக்கடுவையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இரண்டு ஆண்கள் கொல்லப்பட்டுள்ளனர் ☞ 2



## சூரன் போரில் வாள்வெட்டு!


### இருவர் படுகாயம்

சூரன் போரில் வாள் வெட்டுக்கு இலக்காகி இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணியைச் சேர்ந்த நவரத்தினராசா ஜனந்தன் (வயது 33) மற்றும் வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் கஜானந்தன் (வயது 38) ஆகியோரே வாள் வெட்டில் படுகாயமடைந்துள்ளனர். ☞ 2

# நீதி அமைச்சருக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்

## மாவட்ட செயலகத்துக்குள் திடீரென நுழைந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோஷம்



(இ. கலையமுதன்)

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர். ☞ 8

## ‘21’ திருத்தச் சட்டம் இன்று முதல் அமுல்



நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் அண்மையில் (21) நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்த்தன இன்று (31) தனது கையொப் பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டமூலம் கடந்த ☞ 2

## யாழில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை




(இ. கலையமுதன்)

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் இன்று யாழ். மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில் நீதி, சிறைச்சாலைகள் ☞ 2

## முன்னாள் போராளிகளின் தகவலை ஏன் திரட்டுகிறீர்?

### அரசு மீது அருட்தந்தை பாய்ச்சல்



முன்னாள் போராளிகள் ஏற்கனவே திறந்த வெளி சிறைக்குள் இருப்பதாகவே உணரும் நிலையில் தகவல்கள் திரட்டும் செயற்பாடு சிறைக்குள் இருக்கும் உணர்வையே ஏற்படுத்தும்.

– இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் ☞ 8

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## இரண்டு மீனவர்கள் சடலங்களாக மீட்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் இரண்டு மீனவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு – கருநாட்டுக்கேணியில் கரைவலைத் தொழில் செய்து வரும் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் கடலில் இருந்து ☞ 8

## வலி. வடக்கு காணி சுவீகரிப்புக்கு எதிராகப் புதனன்று ஆர்ப்பாட்டம்

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு




வலிகாமம் வடக்கு காணி சுவீகரிப்புக்கு எதிராகக் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று ஊடக சந்திப்பை நடத்தி அழைப்பு விடுத்துள்ளது. ☞ 2

## வடக்கு மாகாணமே இலங்கையின் போதைப்பொருள் விநியோக மையம்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் உயிர்கொல்லி போதைப்பொருளை கடத்துகின்ற – விநியோகிக்கின்ற மையமாக வடக்கு மாகாணம் மாறியுள்ளது.

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அவரது அமைச்சு ஊடாக முன்னெடுக்கவுள்ள நடமாடும் சேவையில் கலந்துகொள்ள வந்துள்ள அமைச்சர் ☞ 8

## ஏனைய அரசியல் கைதிகளையும் விரைந்து விடுவிக்க நடவடிக்கை

### யாழில் நீதி அமைச்சர் உறுதி



யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில், நீண்ட ☞ 8

## தன்னிச்சையாகச் செயற்பட்டால் இறுதியில் அழிவுதான் ஏற்படும்

### முற்போக்குக் கூட்டணியின் தலைமையை பகிரங்கமாக எச்சரிக்கின்றார் வேலுகுமார்



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைத்துவங்கள் தன்னிச்சையான முறையிலும், எதேச்சதிகாரமாகவும் செயற்பட்டால் கூட்டணி குறித்து மக்கள் மத்தியில் ☞ 8

## தேர்தலைத் தள்ளிப்போட ஒருபோதும் இடமளியோம்

### டலஸ் எம்.பி. திட்டவட்டம்



ஈரானில் இருந்த அழுக்கு மனிதன் குளிப்பதற்கு அஞ்சியது போல், தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசும் அஞ்சுகின்றது. ஆனால், ஈரான் மக்கள் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## நீதிமன்றம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹிக்கடுவை – திராணகம பிரதேச வீதியில் இன்று காலை 9.30 மணியளவில் இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலி மேல் நீதிமன்றத்தில் குற்ற வழக்குஒன்றில்முன்னிலையாவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இருவரே மற்றொரு மோட்டார்சைக்கிளில்வந்த அடையாளம் தெரியாத இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்துவதற்காக ரி – 56 ரக துப்பாக்கிப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிழந்தவர்கள் ஹிக்கடுவை – கலுபே பகுதியைச் சேர்ந்த 47 மற்றும் 26 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இரண்டு பேரும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஹிக்கடுவை பகுதியில் 'கடா ரொரான்' எனப்படும் திட்டமிடப்பட்ட குற்றச் செயலுடன் தொடர்புடைய பாதாளக் குழு உறுப்பினர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர்கள் என்று பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அத்துடன் உயிரிழந்தவர்கள் பல மனிதப் படுகொலை மற்றும் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்பதுடன், அவை தொடர்பான வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## வலி.வடக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது கருத்துத் தெரிவித்த மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள்,

எமது மக்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் இனத்துக்காகவும் போராட்டம் ஒன்றுக்கான அழைப்பை இதன்போது விடுக்கின்றோம்.

கடந்த மாதம் காணி சுவீகரிப்பு தொடர்பாக காணி அமைச்சின் மேலதிக செயலாளர் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்ற வருகின்றது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அந்தவகையில் வலிகாமம் வடக்கு காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணியளவில் எமது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, தமிழர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கக்கூடிய மதகுருமார், சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் என அனைத்துத் தரப்பினரையும் கட்சி, பேதமின்றி இந்தப் போராட்டத்தில் பங்கெடுக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுக்கின்றது – என்றனர்.

இந்த ஊடக சந்திப்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அ. விஜயகுமார், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் எஸ். றொபின், யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சி.ஜெல்சின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## யாழில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச, அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் குமாரி, இழப்பீடுகளுக்கான பணிப்பாளர் நாயகம் எஸ்.எல்.எம். ஹசீம் மற்றும் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், துறை சார் அதிகாரிகள், நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், இழப்பீட்டுக்கான அலுவலகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் நாயகம் ஆகிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பங்குபற்றலுடன் பிறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல், பிரஜாவுரிமை சான்றிதழ் பெற்றுக்கொள்ளல், இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களுக்கான காணித் தேவை மற்றும் காணி உரிமை பிரச்சினைகள், வன்முறையால் பாதிக்கப்பட்ட சொத்து மற்றும் உயிரிழப்பு காயத்துக்கான நட்டஈடு பெற்றுக்கொள்ளல், தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினூடாக ஏற்கனவே அனுப்பப்பட்ட கோவைகளை பூரணப்படுத்தல் தொடர்பான சேவைகள் இடம்பெற்றன.

அத்துடன் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தால் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவு, இறப்பு, காயம் அடைந்தவர்களுக்கான கொடுப்பனவு, அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு ஆகியனவும் வழங்கிவைக்கப்பட்டன.

## சூரன்போரில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தை, பங்குருமுருகன் ஆலயத்தில் நேற்று மாலை சூரன் போர் திருவிழா இடம்பெற்றது.

அதன்போது, ஆலயத்தில் இருஇளைஞர் குழுக்களுக்கிடையில் தர்க்கம் ஏற்பட்டது. தர்க்கம் கைக்கலப்பாக மாறி வாள் வெட்டில் முடிவடைந்தது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 21 திருத்தச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓகஸ்ட் 10ஆம் திகதி நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பின்னர் இதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய நீதி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த ஒக்டோபர் 20, 21ஆம் திகதிகளில் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதங்கள் நடைபெற்றன.

இரண்டாவது மதிப்பீட்டின் இறுதியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 179 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குழுநிலையில் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட பின்னர் மூன்றாவது மதிப்பீட்டுக்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இதற்கு ஆதரவாக 174 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டம், 21 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமாக இன்று முதல் அமுலுக்கு வருகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உருப்பெறும் மலையக தேசியம்

மலையகத்தின் பிரதான தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தமது இனத்தின் நலனுக்காக ஒன்றித்து செயல்பட இணங்கி இருக்கின்றமை ஒரு பெரும் வரலாற்று திருப்பமாகும்.

மலையக மக்களை – அவர்களின் வலிமையான தொழிற்சங்கங்களை – பூரணமாக ஒன்றிணைக்கும் கட்டமைப்புகளாக இக்கட்சிகள் இருக்கின்றமை அவதானிக்கத்தக்கது. இந்த அரசியல் கட்சிகளின் ஐக்கியம் என்பது மலையக மக்களின் பூரணத்துவமான ஒன்றிப்பு என்று சொல்லப்படக் கூடியது. அதில் கிஞ்சித்தும் சந்தேகம் இல்லை.

முன்னாள் தலைவர் சந்திரசேகரனின் மகள் உருவாக்கிய கட்டமைப்பு, பிரதான இரு தேசிய கட்சிகளும் மலையகத்தை ஒட்டி வைத்திருக்கும் தொழிற்சங்கங்கள் போன்றவற்றைக் கணக்கெடுத்தால் கூட, அவை மேற்படி ஒன்றிணைவுடன் ஒப்பிடுகையில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுதான் என்பது நிதர்சனம்.

மலையகத் தமிழ் மக்களை இலங்கை சமூகத்துடன் மேலும் எவ்வாறு இணைப்பது என்பது தொடர்பில் ஆராய குழு ஒன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்த போதுதான், அவருக்கும் சேர்த்து ஒரு காத்திரமான செய்தியாக, மறுபுறத்தில் மலையக மக்களாக நாங்கள் ஒன்றுபட்டு, ஐக்கியப்பட்டு, வீறு கொண்டு நிற்கின்றோம் என்ற தகவல் மலையகக் கட்சிகளால் – மலையகத் தலைவர்களால் – உணர்த்தப்பட்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல, இலங்கையில் மலையக மக்களின் நிலைமை என்னவென்பதைத் தன்மான உணர்வோடு வெளிப்படையாக உரைத்திருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. அது நோக்கப்பட வேண்டியது.

இலங்கைக்கு மலையகத் தமிழர்கள் உழைப்பதற்காக மட்டும் வரவில்லை, ஆளவும்தான் வந்தார்கள் என்பதை சிங்கள தலைவர்களுக்கும் சேர்த்து எடுத்துரைத்திருக்கின்றார் மனோ கணேசன்.

“மலையக மக்கள் உழைப்பாளர்களாக இலங்கைக்கு அடியெடுத்து வைத்து 2023 ஆம் ஆண்டுடன் இருநூறு வருடங்களாகின்றன. நாங்கள் இங்கு உழைப்பதற்கு மட்டும் வரவில்லை. ஆளவும்தான் வந்துள்ளோம். கண்டி இராஜ்ஜியத்தை கடைசியாக ஆண்ட மன்னன் கூட இந்தியா வம்சாவளி தமிழர்தான். எனவே, நாங்களும் ஆண்ட பரம்பரைதான். இலங்கையில் இன்று ஒரு தேசிய இனமாக எழுச்சி பெற்றுள்ளோம்.”

– என்ற மனோ கணேசனின் கூற்று ஐக்கியப்பட்ட மலையக சமூகத்தின் பலத்துடன் உறுதியாக பிரதிபலிக்கப்படும் போது நமது மலையக உறவுகள் நெஞ்சை நிமிர்த்தி நிற்கலாம்.

நாங்கள் இங்கு உழைக்க வந்தவர்கள் மட்டுமல்லர், ஆளவும் வந்தோம் என்று பெருமித பேச்சை நிமிர்ந்த உறுதியுடன் உரைக்கும் தகுதியை, ஒரு தேசிய இனமாக ஐக்கியப்பட்டு எழுந்து நின்றபடி, தன் மக்கள் சார்பில் மனோ கணேசன் கூறுகின்றமை தமிழர்களை மெய்சிலிர்க்க வைக்கின்றது என்பது உண்மை.

இந்த நிலைமையை ஏற்படுத்த இணங்கிவரும் மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன், ஜீவன் தொண்டமான், செந்தில் தொண்டமான் போன்ற தலைவர்களுக்கு தமிழ் உலகம் தலை சாய்த்து சலாம் வைக்கிறது.

வெளியில் நிற்கும் சில உதிரித் தலைவர்களையும் இந்த ஐக்கியத்துக்குள் சங்கமிக்க வைப்பது கூட மலையகக் கூட்டுக்குக் காலத்தின் கட்டாயமாகும்.

# அரசமைப்புப் பேரவைக்கு உறுப்பினர்களை தெரியும்போது நேர்மைத்தன்மை வேண்டும்!

## ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வலியுறுத்து




(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டிருக்கும் அரசமைப்பிற்கான 22 ஆவது திருத்தத்தின் பிரகாரம் அரசமைப்புப் பேரவை மற்றும் அதனைத் தொடர்ந்து நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பன சுதந்திரமாகவும், யாருக்கும் பக்கச்சார்பற்ற வகையிலும் இயங்குவது அவசியமாகும் என்பதுடன் அவை சோலிச குடியரசு நாடு மற்றும் நாட்டிலுள்ள கட்டமைப்புக்கள் மீதான நம்பிக்கையை இன்னும் வலுவாக உறுதிப்படுத் தும் விதமாக செயற்படவேண்டும் என ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி சார்பில் அந்தக் கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் முஸ்தபா விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எமது நாட்டின் அரசாங்கத்தால் இம்மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பிற்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலம், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைவாக குழுநிலையின்போது மேற்கொள்ளப்பட்ட சில திருத்தங்களுடன் கடந்த 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது. இது நாட்டின் இன்றைய நிலைக்கு பொருத்தமானதாக அமையுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

திடீரென எழுந்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக நாட்டுமக்களிடம் வலுப்பெற்ற போராட்டங்களே இந்த அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான காரணமாக அமைந்தது. இதனால் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தத் திருத்தம் இலங்கையர்களை நிம்மதியாகவும், துன்புறுத்தலில்லாத வகையிலுமான வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தத் திருத்தத்தில் 20 ஆவது திருத்தத்துக்கு முன்னர் காணப்பட்ட விடயங்கள் முழுமையாகப் பூர்த்திசெய்யவில்லை என்ற குறையுடன் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் தொடர்பில் உரியவாறான கடப்பாடுகள் மற்றும் மட்டுப்பாடுகளை விதிக்காமல் விட்டிருப்பது குறைபாடாக அமைந்துள்ளதாகப் பார்க்கின்றோம்.

22 ஆவது திருத்தத்தின் பிரகாரம் வலியுறுத்தப்பட்டுள்ள அரசமைப்புப்பேரவைக்கான உறுப்பினர்களைப் பரிந்துரைசெய்யும்போது அதன் நேர்மைத்தன்மையை உறுதிப்படுத்துமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்கட்சித் தலைவர்களிடம் இவ்வேளையில் வலியுறுத்துகின்றோம்.

அதேவேளை, அரசமைப்புப்பேரவை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் சுயாதீன ஆணைக் குழுக் களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பதில் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும் அனைவரையும் உள்ளடக்கியதுமான செயன்முறையை அந்தப் பேரவை பின்பற்றவேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ள விடயம் இங்கு கவனிக்கப்பட வேண்டும் என நாங்களும் வலியுறுத்துகின்றோம். – என்றார்.

# எம்.பிக்களின் இரட்டைக் குடியுரிமை குறித்த விசாரணை இன்றுடன் நிறைவு

## குடிவரவு குடியகல்வு திணைக்களம் தகவல்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் இரட்டைக் குடியுரிமை தொடர்பான விசாரணை இன்று (திங்கட்கிழமை) நிறைவடையவுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கண்டறிய விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து உறுப்பினர்களின் பிறந்தநாள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்களை கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற பொதுச் செயலாளரிடம் குடிவரவு குடியகல்வு திணைக்களம் கோரியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்பிறகு, குடிவரவுத் திணைக்களம் உரிய பட்டியல்களைச் சரிபார்க்கத் தொடங்கியுள்ளது.

எவ்வாறாயினும் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லைஎன குடிவரவுகுடியகல்வுதிணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இன்று இறுதித் தீர்மானத்தை வழங்க முடியும் என குடிவரவு குடியகழ்வு திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# யால தேசிய பூங்காவிற்குள் வாகனம் ஓட்டிய விவகாரம்: அமைச்சரின் சகோதரனின் மகன் கைதாகிபின் விடுதலை!



யால தேசிய பூங்காவிற்குள் வாகனம் ஓட்டியமை தொடர்பாக அமைச்சர் மஹிந்த அமரவீரவின் மூத்த சகோதரரின் மகன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட அவர் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

முன்னதாக, சம்பவம் தொடர்பில் ஒன்பது சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.


இதேநேரம் மேற்படி சம்பவத்தில் தனது மகனுக்கு தொடர்பு இருப்பதாக வெளியான குற்றச்சாட்டை அமைச்சர் மஹிந்த அமரவீர நிராகரித்திருந்தார்.

சம்பவம் நடந்த நாளில் தனது மகன் காலிக்கு அப்பால் பயணம் செய்ததற்கு போதிய ஆதாரங்கள் இருந்தால் அரசியலில் இருந்து விலகுவேன் என்றும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரட்டைக் கார்க் குண்டுத் தாக்குதல்; சோமாலியாவில் 100 பேர் வரைப் பலி

## முந்நூறுக்கும் அதிகமானோர் படுகாயம்





மொகாடிஷு, ஒக்.31

சோமாலியத் தலைநகர் மொகாடிஷுவில் உள்ள அரசு தலைமை அலுவலகத்தில் நேற்று அடுத்தடுத்து இரண்டு கார் வெடிகுண்டுகள் வெடித்தன. இந்த இரட்டைக் குண்டு வெடிப்பு தாக்குதலில் 100 பேர் பலியாகினர் எனவும், மேலும் முந்நூறுக்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர் எனவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தத் தகவலை, சோமாலியாவில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ஹசன் ஷேக் முகமது இன்று அதிகாலை வெளியிட்டிருந்த அறிக்கையில் உறுதிபடுத்தியுள்ளார்.

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் செயல்பட்டு வரும் அல்கொய்தாவுடன் தொடர்புடைய அல்பாப் என்ற பயங்கரவாத அமைப்பு அரசைக் கவிழ்க்க முயற்சித்து வருகிறது. இந்தப் பயங்கரவாத அமைப்பு, சோமாலியா மக்கள் மற்றும் இராணுவத்தைக் குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு முன்னர் தலைநகர் மொகாடிஷுவில் 2017இல் நடந்த லொறி வெடிகுண்டுத் தாக்குதலில் சுமார் 500 பேர் கொல்லப்பட்டனர். அந்த சம்பவத்திற்கு பின் நடைபெறும் மிகக்கொடூரமான குண்டுவெடிப்பு சம்பவமாக இது அமைந்துள்ளது.

இந்த கொடூர தாக்குதலுக்கு அல்பாப் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் தற்கொலை படை போல் செயல்பட்டு இருக்கலாம் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் நீளமான ரயிலை இயக்கி சுவிஸ் சாதனை!



1.9 கிலோமீட்டர் நீளமுடைய உலகின் மிக நீளமான பயணிகள் ரயிலை சுவிட்சர்லாந்தின் ஆல்ப்ஸ் மலை வழியாக இயக்கி சுவிஸ் ரயில்வே திணைக்களம் சாதனை படைத்துள்ளது.

சுவிட்சர்லாந்து ரயில்வேயின் 175ஆம் ஆண்டு விழாவை கொண்டாடும் வகையில், ஆல்ப்ஸ் மலைத் தொடர் வழியாக 100 பெட்டிகள் இணைக்கப்பட்ட 1.9 கி.மீ நீளம் கொண்ட மிக நீண்ட பயணிகள் ரயிலை இயக்கி சுவிஸ் ரயில்வே இந்தப் புதிய சாதனையைப் படைத்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் பிரிடா முதல் பெர்குயன் பகுதி வரை ஆல்ப்ஸ் மலைத் தொடரில் அல்புலா/பெர்னினா ரயில் வழித்தடம் அமைந்துள்ளது. இந்த அல்புலா/பெர்னினா ரெயில் வழித்தடம் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாக 2008இல் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடம் ஆகும். இந்த வழித்தடம், பனி போர்த்திய மலையின் இடையே இயற்கை அழகை ரசித்து செல்லும்படி 22 சுரங்கங்கள், 48 பாலங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சாதனை குறித்து ரயில்வே இயக்குனர் ரெனேட்டோ பெசியாட்டி கூறுகையில், சுவிட்சர்லாந்தின் சில பொறியியல் சாதனைகளை வெளிக்காட்டி முன்னிலைப்படுத்தவும், சுவிஸ் ரயில்வேயின் 175ஆம் ஆண்டு விழாவை கொண்டாடும் வகையில், மிக நீண்ட பயணிகள் ரயிலை இயக்கியிருப்பதாக கூறினார். அதன்படி 4 என்ஜின்கள், 100 பெட்டிகள் கொண்ட 1.9 கி.மீ தூரத்திற்கு நீண்ட ரயில் இயக்கப்பட்டது. இதன் மூலம், உலகின் மிக நீளமான பயணிகள் ரயிலை இயக்கி சுவிஸ் ரயில்வே சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இடதுசாரிக் கட்சி வேட்பாளர் லூலுடா பிரேசில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி



பிரேசிலியா, ஒக்.31

உலகின் 4 ஆவது மிகப்பெரிய ஜனநாயக நாடான பிரேசிலில் கடந்த ஒக்டோபர் 02 ஆம் திகதி அதிபர் தேர்தல் நடந்தது. நாடு முழுவதும் அமைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான வாக்குச்சாவடிகளில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்தனர்.

தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் தற்போதைய அதிபர் ஜெயீர் போல்சனரோ 49.10 சதவீத வாக்குகள் பெற்று தோல்வியை தழுவினார். இடதுசாரி தலைவரும், முன்னாள் அதிபருமான லுலு டா சில்வா 50.90 சதவீத வாக்குகள் பெற்று மீண்டும் பிரேசில் அதிபராக வெற்றிபெற்றுள்ளார்.

இந்த தேர்தலில் தற்போதைய அதிபர் ஜெயீர் போல்சனரோ மீண்டும் போட்டியிட்டார். அவர் உள்பட மொத்தம் 9 பேர் அதிபர் பதவிக்கான போட்டியில் களத்தில் இருந்தனர். எனினும் தீவிர வலதுசாரியான ஜெயீர் போல்சனரோவுக்கும், முன்னாள் அதிபரும் ஊழல் வழக்கில் சிறைவாசம் அனுபவித்து விட்டு வந்துள்ள இடதுசாரி வேட்பாளருமான லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவுக்கும் இடையிலே பலப்பரீட்சை நடந்தது. தேர்தலுக்கு முந்தைய கருத்து கணிப்பு கள் சில்வாவுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாக தெரிவித்தன. கொரோனாத் தொற்றைக் கையாண்ட முறை, அமசோன் மழைக்காடுகள் அழிப்பு உள்ளிட்ட விவகா ரங்களில் ஜெயீர் போல்சனரோ அரசு மக்களிடம் கடும் எதிர்ப்புகளையும், விமர்சனங்களையும் எதிர்கொண்டதால் இந்த தேர்தலில் அவரது வெற்றி வாய்ப்பு கேள்விக்குறியாக இருந்தது. புதிய அதிபராக தேர்வான லுலு டா சில்வா அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பதவியேற்க உள்ளார். பிரேசில் தேர்தல் நடைமுறையின் படி அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# குஜராத்தில் மோர்பி தொங்கு பாலம் அறுந்து வீழ்ந்ததில் 141 பேர் மரணம்!

## 177 பேர் மீட்கப்பட்டனர்; ஆற்றில் தொடர்ந்து தேடுதல்




ஆமதாபாத், ஒக்.31

சுற்றுலாப் பயணிகள் எடையைத் தாங்க முடியாமல், பாலம் அறுந்து விழுந்ததில் ஏராளமானோர் ஆற்றுக்குள் விழுந்தனர். இதில் 141 பேர் உயிரிழந்தனர். இதுவரை விபத்தில் சிக்கிய 177 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

குஜராத் மாநிலம் மோர்பி நகரில் மச்சு ஆற்றின் குறுக்கே ஒரு தொங்கு பாலம் அமைக்கப்பட்டு இருந்தது. அந்த பாலம் சுமார் 100 ஆண்டுகள் பழமையானது. சிதிலம் அடைந்த அந்தஒ பாலத்தை சீரமைக்கும் பணி கடந்த 6 மாதங்களாக நடந்து வந்தது. பணிகள் அனைத்தும் முடிவடைந்ததையடுத்து, மக்களின் பயன்பாட்டுக்காக குஜராத்தி புத்தாண்டு தினமான கடந்த 26 ஆம் திகதி பாலம் திறந்துவைக்கப்பட்டது. இந்தநிலையில், விடுமுறை நாளான நேற்று மாலை 6.30 மணி அளவில் ஏராளமான சுற்றுலா பயணிகள் அந்த பாலத்தின் மீது குவிந்தனர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என ஏராளமானோர் திரண்டிருந்தனர். அப்போது அவர்களின் எடையை தாங்க முடியாமல், பாலம் திடீரென அறுந்து விழுந்தது. இதையடுத்து, பாலத்தில் நின்று கொண்டிருந்த ஏராளமானோர் ஆற்றுக்குள் விழுந்தனர். தகவல் அறிந்து தேசிய பேரிடர் மீட்புப்படை வீரர்களும், மாநில பேரிடர் மீட்புப்படையினரும் உடனடியாக விரைந்து வந்து மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

ஆற்றுக்குள் விழுந்தவர்களில் பலர் நீரில் மூழ்கி இறந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும், குழந்தைகளும் என்று தெரிகிறது. நீரில் மூழ்கிய மற்றவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. எனவே பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்று அதிகாலை நிலவரப்படி, பாலம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 141 ஆக உயர்ந்துள்ளதாக குஜராத் தகவல் துறை தெரிவித்தது. மேலும், இதுவரை விபத்தில் சிக்கிய 177 பேர் மீட்கப்பட்டுள்ளனர். 19 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் சிக்கி யவர்களை தேடுதல் மற்றும் மீட்கும் பணியில் இராணுவம், கடற்படை, விமானப்படை, என்.டி.ஆர்.எவ்., தீயணைப்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மீட்பு பணி இன்னும் நடந்து வருகிறது. மீட்பு பணியை துரிதப்படுத்த, இன்று அதிகாலை 3 மணிக்கு இராணுவ வீரர்கள் குழு, சம்பவ இடத்திற்கு சென்றடைந்தது என்று குஜராத் தகவல் துறை இன்று காலை வெளியிட்ட தகவலில் தெரிவித்தது.

# பாரதிய ஜனதா எம்.பியின் குடும்பத்தில் 12 பேர் பலி!



குஜராத் மாநிலம் மோர்பி கேபிள் தொங்கு பாலம் அறுந்து விழுந்ததில் ராஜ்கோட் பாரதிய ஜனதாக் கட்சி எம்.பியான மோகன்பாய் குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் உயிரிழந்தனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

விடுமுறை நாளான நேற்று மாலை 'சத்' பூஜைக்காக ஏராளமானோர் அந்த பாலத்தின் மீது குவிந்தனர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என ஏராளமானோர் திரண்டிருந்தனர். அப்போது அவர்களின் எடையை தாங்க முடியாமல், பாலம் திடீரென அறுந்து விழுந்தது. இதையடுத்து, பாலத்தில் நின்று கொண்டிருந்த ஏராளமானோர் ஆற்றுக்குள் விழுந்தனர்.

இந்த விபத்துக் குறித்துப் பல்வேறு புதுப்புதுத் தகவல்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. பாலத்தின் கயிறை இளைஞர்கள் சில எட்டி உதைப்பதும் பாலத்தை பிடித்து ஆட்டும் காட்சிகளும் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன. பாலத்தில் கூடிய கூட்டத்தை கட்டுப்படுத்த அங்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிகிறது.

பா.ஜ.கவை சேர்ந்த மோகன்பாய் கல்யாண்ஜி குந்தாரியா, குஜராத்தின் ராஜ்கோட் தொகுதி எம்.பி.யாக உள்ளார். அவருடைய உறவினர்கள் மோர்பி கேபிள் பாலம் அறுந்து விழுந்த போது அந்த பாலத்தில் இருந்தனர். அதில் எம்.பி மோகன்பாய் குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து அவர் கூறியதாவது, விபத்தில் ஐந்து குழந்தைகள் உட்பட எனது குடும்பத்தைச் சேர்ந்த 12 பேரை இழந்துவிட்டேன். மிகுந்த வருத்தத்தில் உள்ளேன். எனது சகோதரியின் குடும்பத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்களை இழந்துவிட்டேன். இறந்தவர்களில் பெண்களும் குழந்தைகளும் அதிகம். இந்த சோக சம்பவம் எப்படி நடந்தது என்பது குறித்து விசாரணை நடத்தப்படும். இதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள். உள்ளூர் மக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறினார்.

# பகத்சிங் நாடகத்தின் ஒத்திகையில் தூக்குக் கயிறு இறுகி சிறுவன் பலி!

## கர்நாடகா மாநிலத்தில் சோக சம்பவம்

பகத்சிங் நாடகத்துக்காக வீட்டில் ஒத்திகை பார்த்தபோது, கயிறு கழுத்தை இறுக்கி சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தான்.

கர்நாடகா மாநிலம் சித்ரதுர்கா டவுன் கவுளகோட் பேரங்காளை பகுதியை சேர்ந்தவர் நாகராஜ். இவரது மனைவி பாக்யலட்சுமி. இவருக்கு சஞ்சய் கவுடா என்ற மகன். இவன் அந்தப் பகுதியில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில் 7 ஆம் வகுப்புப் படித்து வந்தான். இந்த நிலையில் முதலாம் திகதி (நாளை) தனியார் பள்ளியில் நடக்கும் கன்னட ராஜ்யோத்சவா விழாவில் சஞ்சய், பகத்சிங் வேடம் அணிந்து நடிக்க இருந்தான். இதற்காக அவன் ஒத்திகையில் ஈடுபட்டு வந்தான்.

நேற்றுமுன்தினம் சஞ்சய் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் நிகழ்ச்சிக்கான ஒத்திகையில் ஈடுபட்டிருந்தான். அப்போது பகத்சிங்கை தூக்கிலிடும் காட்சியை சஞ்சய் நடித்து கொண்டிருந்தான். அப்போது, முகத்தை துணியால் மூடி கழுத்தில் கயிறை கட்டி சோபாவில் இருந்து குதித்துள்ளான். அந்த சமயத்தில், அவனது கழுத்தை கயிறு இறுக்கி உள்ளது. அப்போது வீட்டில் யாரும் இல்லாததால், சஞ்சய் மூச்சுத்திணறி சம்பவ இடத்திலேயே



பரிதாபமாக உயிரிழந்தான். இந்த நிலையில் வெளியே சென்றிருந்த அவனது பெற்றோர், வீட்டுக்கு திரும்பி வந்தனர். அப்போது, சஞ்சய் தூக்கில் பிணமாக கிடப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்து கதறி அழுதனர். இதுபற்றிய தகவல் அறிந்ததும் பரங்கி பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பார்வையிட்டனர். பின்னர் அவனது உடலை பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ் பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து பரங்கி பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# சுவாமியார் நித்தியானந்தா எட்டு புதிய சாதனைகளாம்

சாமியார் நித்தியானந்தா சமூகவலைத் தளங்களில் தொடர்ந்து பல வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்.

இந்நிலையில் அவரின் கைலாசா நாட்டின் பேஸ்புக் பக்கத்தில் நித்யானந்தா 8 சாதனைகளை படைத்துள்ளார் எனவும், அவை 'ஆசியா புக் ஒவ் ரெக்கார்ட்ஸ்' மூலம் ஏற்கப்பட்டுள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது.

அதாவது ஒரு மணி நேரத்தில் அதிக வசனங்களை உச்சரித்தமை, ருத்ர மந்திரத்தை அதிக நேரம் வாசித்தமை, உயிருடன் வாழும் ஒருவருக்கு அதிக பாடல்களை அர்ப்பணித்தமை, தனி ஒருவரின் அதிகபட்ச புத்தகங்கள் (1,123 புத்தகங்கள்), அதிகபட்ச பாரம்பரிய ஆசனங்கள், அதிகபட்ச பிரமோற்சவங்கள், அதிக நேரம் பொது சொற்பொழிவு வழங்கியமை (7,407 தலைப்புகளில் 289,928 மணி நேரம்) உள்ளிட்ட 8 சாதனைகளை நித்யானந்தா படைத்துள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியின்படி அவர் 289,928 மணி நேரம் சொற்பொழிவு வழங்குவது என்றால் இடையில் ஓய்வே எடுக்காமல் குறைந்தது 33 வருடங்கள் இரவு, பகல், நாள் – பொழுது வேறுபாடின்றி தொடர்ந்து அவர் உரையாற்றியிருக்க வேண்டும். ஆக,44 வயதேயான (பிறப்பு 1978) சுவாமி நித்தியானந்தா அந்த 44 வருட வாழ்க்கையில் தொடர்ந்து 33வருட கால நேரம் சொற்பொழிவு வழங்கியமை எங்ஙனம் சாத்தியம் என்று பார்வையாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# தேசிய கண் வைத்தியசாலை நிபுணர்களினால் சாய்ந்தமருதில் இன்று கண் வைத்திய முகாம்








(நூருள் ஹுதா உமர்)

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் இருந்து வருகைதந்த, கண் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்களினால் நடாத்தப்பட்ட கண் வைத்திய முகாம் இன்று சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர். ஐ.எல்.எம்.றிபாஸின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பளார் டொக்டர்.ஏ.ஆர்.எம். தௌபீக் அவர்களின் சிபாரிசின் பேரில், சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையுடன் இணைந்து இவ்வைத்திய முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் கீழ் வருகின்ற கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி மற்றும் இறக்காமம் ஆகிய சுகாதார வைத்திய அலுவலக பிரிவுகளில் உள்ள கண் பார்வையுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் அறுபது வயதிற்கு மேற்பட்ட சுமார் 750 பயனாளிகள் சுகாதார வைத்திய அலுவலகத்தினால் பதிவு செய்யப்பட்டு இம்முகாமில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இவ்வைத்திய முகாமை தொடர்ந்து, தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக சிகிச்சைகளை கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் மேற்கொள்ளவும் குறிப்பாக லென்ஸ்(வில்லை) வைத்தல் சிகிச்சை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

டொக்டர்.ஐ.எல்.எம்.றிபாஸினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இம்முகாமில், இலங்கை தேசிய கண் வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர்.ஏ.ஆர்.எம். தௌபீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர். எம்.சி.எம்.மாஹிர், பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் டொக்டர் எம்.ஏ. நபீல், தேசிய கண் வைத்தியசாலை சிரேஷ்ட கண் வைத்திய மற்று அறுவைச் சிகிச்சை நிபுணர் டொக்டர். மானெல் பஸ்குவல், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர்.ஏ.எல்.எம்.அஜ்வத், வைத்திய அதிகாரி சனுஸ் காரியப்பர், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் எம்.ஐ.எம்.சதாத் அத்துடன் இன்னும் பல அதிதிளும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் கீழ் வருகின்ற பெரிய நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான கரையோர பிரதேசம், மாவடிப்பள்ளி, சம்மாந்துறை, மல்வத்தை மற்றும் இறக்காமம் வரை அத்துடன் கல்முனை தொடக்கம் மத்தியமுகாமை வரையான பகுதிகளை உள்ளடக்கிய அம்பாறை மாவட்டத்தின் 13 சுகாதார வைத்திய அலுவலக பிரிவுகளில் பிரதேசங்களுக்கான தொற்றா நோய்களைக் கண்டறியும் மற்றும் பின்தொடர் சிகிச்சை சேவைகளை அளிக்கும் நிலையமாக (Centre for Excellence in Non Communicable Disease) சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையை நிறுவுவதற்கான முயற்சிகள் திணைக்கள மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்ட பணியாக கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் இருந்து கண் தொடர்பான விடே வைத்திய நிபுணர்கள் குழு, சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு வருகைதந்து வைத்திய முகாமை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# மாணவரின் வினைத்திறன் அபிவிருத்திக் கருத்தரங்கு

(பழுவூரான்)

போரதீவுப்பற்றுக் கோட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் வினைத்திறனை விருத்தி செய்வதற்கான உளவள அபிவிருத்திக் கருத்தரங்கு வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயத்தில் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகியின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் போரதீவுப்பற்றுப் பிரதேச சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் அ. குககுமாரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் போரதீவுப் பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.அருள்ராசா, பட்டிருப்பு கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பா.வரதராஜன், சமூக அபிவிருத்தி உதவியாளர் சி.குபேந்திரராசா மற்றும் பெற்றோர்கள் ஆகியோருடன் சுமார் 100 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டு. கித்துள் சிவன் கோவில் கும்பாபிஷேகம்வெள்ளியன்று




(பழுவூரான்)

மட்டக்களப்பு கித்துள் ஸ்ரீ சந்நியாசிமலை சிவன் ஆலய புனராவர்த்தன நூதன அஷ்டபந்தன பக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) காலை 9.55 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்த வேளையில் சன்னியாசிமலை சிவலிங்கேஸ்வரப் பெருமானுக்கும், பரிபாரத் தெய்வங்களுக்கும் நிகழ்த்தப்படவுள்ளது.


மேற்படி கும்பாபிகேத்தை முன்னிட்டு, இன்று முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை கிரியைகள் முறைப்படி செய்யப்பட்டு, வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சிவலிங்கேஸ்வரப் பெருமானுக்கும், பரிவாரத் தெயவங்களுக்கும் உரிய விதிப்படி எண்ணெய்க்காப்பு சாத்தப்படும்.

ஆலய கும்பாபிஷேகக் கிரியைகள் யாழ்.குரும்பச்சிட்டி ஆலய முன்னாள் பிரதமகுரு ஆசி. கிரியாகலாபமணி, பிரதிஷ்டாபூணம் சிவஸ்ரீ தி.கு. மாணிக்கவாசகக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 24 தினங்கள் மண் டலாபிஷேகப் பூசைகள் இடம்பெற்று, 24 ஆம் நாள் முடிவில் எதிர் வரும் 27 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 7.00 மணிக்கு பாற்குடப்பவனியுடன், சங்காபிஷேகம் நிகழ்த்தப்படவுள்ளது.

# தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுப்பு!







(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தினுடைய சிரமதான பணிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி இடம்பெற உள்ள நிலையில் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணி குழுவினரால் துயிலும் இல்ல வளாகம் சிரமதானம் செய்கின்ற வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. நேற்று காலை 9.30 மணி அளவில் தேராவில் துயிலும் இல்ல வளாகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்திய பின்னர் மக்கள் சிரமதான பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு மற்றும் மாவீரர்களுடைய பெற்றோர் நலம் விரும்பிகள் சமூக செயற்பாட்டாளர்கள் சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் இணைந்து கொண்டு இந்த சிரமதானப் பணியை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாணின் விலை குறைகின்றது?



பாண் ஒன்றின் விலை இன்று (திங்கட்கிழமை) முதல் 10 ரூபாயிலிருந்து 20 ரூபா வரையில் குறைக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தமது நிர்வாக சபை கூடி இறுதி செய்யும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா சந்தையில் போதிய அளவில் கிடைப்பதால் விலை குறைப்பு ஏற்பட்டுள்ளதாக அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது.

# மண்முனை தென் எருவில் பற்றில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை



மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரி ஜி.சுகுணனின் வழிகாட்டலின் கீழ் களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் கரையோர டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை நேற்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தின் கடற்கரையை அண்டிய பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட குருக்கள்மடம் தொடக்கம் பெரியகல்லாறு வரையிலான கடற்கரைப் பகுதி முழுவதும் இதன்போது சுத்தம் செய்யப்பட்டன. டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டன. பிளாஸ்ற்றிக் போத்தல்கள், கலன்கள் போன்றனவும், இதன்போது சிரமதானத்தின் மூலம் அப்புறப்படுத்தப்பட்டன.

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் மார்புப் புற்று நோய் சிகிச்சை நிலையம்






(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் மார்பகப் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் வாரம் தோறும் வெள்ளிக்கிழமை தினத்தில் விசேட வைத்திய ஆலோசனை வழங்கப்படுவதோடு மார்பக சத்திர சிகிச்சையும் நடைபெறவுள்ளதாக சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர்.ஏ.டபிள்யு.எம்.சமீம் தெரிவித்தார்.

கல்முனை பிராந்தியத்தில் அதிகரித்து வரும் மார்பகப் புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த விசேட வைத்திய சேவை, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதற்கான தனியான சேவை நிலையமும் திறந்து வைக்கப்பட்டது. கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் திறந்து வைக்கப்பட்ட மார்பகப் புற்றுநோய் சிகிச்சை நிலையத் திறப்பு விழாவில் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம் உட்பட வைத்தியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மார்பக புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் கண்டறியப்படுகின்ற போது ஆரம்பத்திலேயே கட்டுப் படுத்தும் நிலையை விடுத்து நோயை வெளிப் படுத்தும் வெட்கத்தால் பலரும் இந்த நோயினால் பாரதூரமாக விளைவுகள் ஏற்படும் நிலை வரை வாளாவிருந்து விடுகின்றனர்.

இவ்வாறான நிலைமைகளில் இருந்து தவிர்க்கும் பொருட்டு இந்த ஏற்பாடு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் இத் திட்டத்தின் மூலம் ஆலோசனை சேவைகள் வழங்குவதற்கும் அவசர பரிசோதனைகள் நடத்தி நோயின் அறிகுறிகள், பாதிப்பு குறித்து கண்டறிந்து அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்ளவதற்குமான நடவடிக்கை ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

## நீதி அமைச்சருக்கு........






(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதி அமைச்சின் நடமாடும் சேவை இன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஆரம்பமானது.

முன்னதாக யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கொட்டும் மழைக்கு மத்தியிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையிலேயே மாவட்ட செயலகத்துக்குள் திடீரென உள்நுழைந்தனர்.

இதன்போது நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள், அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கலந்துகொண்ட நிலையில் அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓ.எம்.பி. வேண்டாம், சர்வதேச நீதி விசாரணையை மட்டுமே நாங்கள் கோருகின்றோம், இரண்டு இலட்சம் ரூபா வேண்டாம், நீதி அமைச்சரே வெளியேறு, விஜயதாச ராஜபக்சவே வெளியேறு என அவர்கள் கோம் எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸார் போராட்டக்காரர்களை வெளியேற்றுவதற்கு முயற்சித்த போதும் அது பலனளிக்காத நிலையில்

ஒரு மணி நேரம் வரை மாவட்ட செயலக கேட்போர் கூடத்துக்குள் கோம் எழுப்பிய போராட்டகாரர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

## ஏனைய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசிகள் கைதிகள் சிலர் அண்மையில் விடுவிக்கப்பட்ட நிலையில் ஏனையோரையும் விடுவிக்குமாறு உறவுகள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாஸ,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டையே பின்பற்றி வருகின்றோம். அண்மையில் சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் சிறையிலுள்ள ஏனையோரின் வழக்கு நிலைமைகள் தொடர்பில் சட்டமா அதிபருடன் தொடர்ந்து கலந்துரையாடி அவர்களை விரைந்து விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் – என்று தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

## இரண்டு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர், கயிற்றை இழுத்த வேளை கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டு காணாமல்போயிருந்தார். அவரைத் தேடும் நடவடிக்கையில் கடற்தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் காணாமல்போன மீனவரின் சடலம், கொக்குளாய் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

சடலத்தை மீட்ட மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கொக்கிளாய் பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

அவர் நீர்கொழும்பு பிரதேசத்தை சேர்ந்தவர் என்று அறியமுடிகின்றது.

அதேவேளை, முல்லைத்தீவில் வீதியில் இருந்து மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீன் வியாபாரியான அவர் வீதியில் சென்று கொண்டிருந்த போது திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குரவில் உடையார் கட்டுப்பகுதியைச் சேர்ந்த ஆதிமுருகன் யோகராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு – செல்வபுரம் பகுதியில் அவர் மீன்களைக் கொள்வனவு செய்வதற்காக பயணித்துக் கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாரடைப்புக் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முன்னாள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–முன்னாள் போராளிகளின் தகவல்களை நீதி அமைச்சின் கீழ் உள்ள தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலகம் திரட்டுவதாகச் செய்திகள் வந்துள்ளன. என்ன நோக்கத்துக்காக இந்தத் தகவல்கள் திரட்டப்படுகின்றன என்பது தொடர்பில் முன்னாள் போராளிகள் மட்டுமல்ல பொதுமக்களும் அச்ச உணர்விலேயே உள்ளனர்.

இது தொடர்பில் நீதி அமைச்சு தெளிவான விளக்கம் கொடுக்க வேண்டும் அத்தோடு வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி மக்களுக்குத் தெளிவூட்டல் பெற்றுக்கொடுப்பதோடு பாதிப்பு ஏற்படும் எனில் தடுத்து நிறுத்துவதற்கு கூட்டான செயற்பாட்டிலும் ஈடுபட வேண்டும்.

அண்மையில் கொழும்பில் வெள்ளத்தை போன்ற தமிழர் அதிகமாக வாழும் பிரதேசங்களில் வீடுகளில் தங்கி இருப்போர் தொடர்பாக பொலிஸார் தகவல் திரட்டுகின்றனர் எனவும், அவ்வாறான தகவல் படிவங்களை எவரும் நிரப்பி கொடுக்க வேண்டாம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பகிரங்கமாகக் கூறியதோடு இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருடனும், ஜனாதிபதியுடன் வினவுவதாகவும் கூறியி ருந்தார்.

இது இவ்வாறு இருக்க தற்போது தமிழர்களை அச்சத்தில் ஆழ்த்தும் வகையில் தமிழர் பகுதியில் முன்னாள் போராளிகளின் தகவல்கள் திரட்டப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

முன்னாள் போராளிகள் ஏற்கனவே திறந்த வெளி சிறைக்குள் இருப்பதாகவே உணரும் நிலையில் தகவல்கள் திரட்டும் செயற்பாடு சிறைக்குள் இருக்கும் உணர்வையே ஏற்படுத்தும். இது உள ரீதியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதோடு சுயமாகவே முன்னாள் போராளிகள் தமது ஜனநாயகச் செயற்பாட்டை மட்டுப்படுத்திக்கொள்ள வழிவகுக்கும். இது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

அண்மையில் அரசு கொண்டுவர முனைந்த புனர்வாழ்வு தொடர்பான திருத்தச் சட்டம் சமூகத்தில் எழுந்த சலசலப்பும் மக்களின் எதிர்ப்பும் சட்டச் சிக்கலும் காரணமாகத் தடுத்து நிறுத்தப்பட்டது. அந்தச் சட்ட அமுலாக்கத்தை வேறு வகையில் நிறைவேற்றுவதற்காக முன்னாள் போராளிகளின் தகவல்கள் திரட்டப்படுகின்றதா?

தெற்கின் போராட்டக் குழுவினர் தொடர்ச்சியாகப் பல்வேறு காரணங்களை முன்வைத்து அரசுக்கு எதிரான வீதிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தங்கள் சகாக்கள் மூன்று பேரையும் விடுவிக்குமாறும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறும் கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்து வைத்திருக்க முன்னாள் போராளிகளின் தகவல்கள் திரட்டப்படுகின்றதா?

இத்தகைய தகவல் திரட்டும் ஏற்பாடு முன்னாள் போராளிகளின் ஜனநாயக ரீதியான மாற்று அரசியல் செயற்பாட்டையும் அது தொடர்பான சிந்தனையையும் தடுக்கும். இது அவர்கள் சார்ந்த குடும்ப உறுப்பினர்களின் சுதந்திர நடமாட்டத்தைக் கூடப் பாதிக்கும். அது மாத்திரமல்ல தற்போது மறை முகமாகப் படையினரும் புலனாய்வுப்பிரிவினரும் இயங்குகின்ற நிலையில் முன்னாள் போராளிகளின் தகவல்கள் திரட்டும் செயற்பாடு நேரடியாகவே அரச படைகள் தமிழர்களைக் கண்காணிப்பில் வைத்திருக்கவும், தமிழர்கள் வாழும் கிராமங்களைத் திறந்த வெளி புனர்வாழ்வு கிராமங்களாக்கவும் பேரினவாதம் முயற்சிக்கலாம். இது உடனே தடுத்து நிறுத்தப்படல் வேண்டும் – என்றுள்ளது.

## வடக்கு மாகாண ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே மேற்படி விடயத்தை வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை – விற்பனை வடக்கில் – யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது. எனது யாழ்ப்பாணப் பயணத்தின்போது இது தொடர்பிலும் ஆராயவுள்ளளேன். பொலிஸார் உள்ளிட்ட பொறுப்புக்கூறும் சகல தரப்பினருடனும் சந்திப்பு நடத்தவுள்ளேன்.

வடக்கு மாகாணத்தில் இளைஞர்கள் உயிர்கொல்லிப் போதைபொருள் பாவனைக்கு அடிமையாகி வருவதால் மிகப்பெரும் சமுதாயப் பிரச்சினை உருவாகியுள்ளது. அதுமட்டுமல்லாமல் பெருமளவான உயிர்கொல்லி போதைப் பொருள் முகவர்கள் வடக்கு மாகாணத்தின் ஊடாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் உயிர்கொல்லி போதைப் பொருளைக கடத்தி வருகின்றனர்.

இதனை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் – என்றார்.

## தேர்தலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி
ஒன்றுகூடி அழுக்கு மனிதனை குளிப்பாட்டியதுபோல, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை அரசுக்குப் பிரயோ கிக்கும்.

– இவ்வாறு சுதந்திர மக்கள் சபை யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தேர்தல் முறைமை மறுசீரமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கு தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த் தனவிடம் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில் கருத்து வெளியிடுகையி லேயே டலஸ் அழகப்பெரும இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திட்டமிட்ட அடிப்படையில் உள்ளூ ராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடு வதற்கு அரசு முயற்சிக்கின்றது. அதன் ஓர் அங்கமாகவே தெரிவுக்குழு நாடகம் அரங்கேற்றப் படுகின்றது.

ஈரானில் வாழ்ந்த நபர் ஒருவர் 5 தசாப்தங்கள் வரை குளிக்கவில்லை. ஏனெனில் தலையில் தண்ணீர் பட்டால் இறந்து விடுவோம் என அவர் நம்பியுள் ளார். இறுதியில் உலகம் அவரை, அழுக்கான மனிதன் என அடையாளப் படுத்தியது.

அது போலவே தேர்தலை நடத்துவதற்குத் தற்போதைய அரசும் அஞ்சுகின்றது. அதற்கு நாம் இடமளிக்கமாட் டோம். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

## தன்னிச்சையாக......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிருப்தி அலை உருவாகி, இறுதியில் அது ஆபத்திலேயே முடியும். எனவே, விட்டுக்கொடுப்புகளுடன் ஜனநாயக வழியில் பயணிப்பதற்குத் தலைமைகள் முன்வர வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும்கூட.

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அடக்கி ஆளும் தனிக்காட்டு ராஜா அரசியலை மலையக மக்கள் நிராகரிக்கின்றனர். கொள்கை ரீதியிலான அரசியலையே அவர்கள் விரும்புகின்றனர். அதன்காரணமாகவே உரிய கொள்கைகளுடன் உதயமான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு மக்கள் அமோக ஆதரவு வழங்கினர். எனவே, மக்களின் மனநிலை என்ன?, அவர்கள் எதிர்பார்ப்பது எத்தகைய அரசியல்? என்பவற்றைப் புரிந்துகொண்டே – தவறுகளை திருத்திக்கொண்டு பயணித்தால் மாத்திரமே மக்கள் மத்தியில் நீடித்து நிலைக்க முடியும்.

மக்களுக்கான அரசியல் பயணத்தை மேற்கொள்வதற்கான வழிகாட்டலையே தலைமைத்துவங்கள் வழங்க வேண்டும். ஜனநாயகப் பண்புகளுக்கு இடமளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பெரும் பின்னடைவு ஏற்படும்.

தென்னிலங்கையில் இருந்த இரு பிரதான கட்சிகள்தான் ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன. இவ்விரு கட்சிகளின் நிலையும் இன்று கவலைக்கிடமாக உள்ளது. காரணம் தலைமைத்துவங்களின் தன்னிச்சையான முடிவும், மக்களின் மனநிலை அறியாத செயற்பாடுகளுமே.

எனவே, மலையக மக்கள் விரும்பும் – ஏற்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் அவ்வாறானதொரு நிலை ஏற்பட இடமளித்துவிடக்கூடாது – என்றார்.